87—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***35135—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, காந்தியார் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, காந்தியார் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, இந்த மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான, வருகிற 24-2-2014 அன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களாலேயே திறக்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றில் குப்தர்களின் காலம் பொற்காலம். தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளப் போகின்ற காலம் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவை ஆளப் போகின்ற காலம் பொற்காலம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற 24-2-2014 அன்று 66-வது பிறந்த நாள் காணும் கழக வாழ்நாள் பொதுச் செயலாளர்,*

2014 பிப்ரவரி 20]

மாட்சிமை தங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருவடிகளைப் பணிந்து வணங்குகிறேன்.

தந்தை பெரியார் பிறந்தார், நம்மை நமக்குக் காட்டினார்; பேரறிஞர் அண்ணா பிறந்தார், உலகத்தை நமக்குக் காட்டினார்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பிறந்தார், தமிழகத்தை உலகத்திற்குக் காட்டினார்; இந்த மூவரின் ஒத்த உருவாக மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்தார்கள், தமிழ் இனத்தையே உலகிற்குக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையை ஆளுகின்ற நீங்கள்; நாளை செங்கோட்டையை ஆளப் போகின்றீர்கள் என உரக்கச் சொல்லி; (மேசையைத் தட்டும் ஒலி) மல்லிகைப் பந்தலின்கீழ் மன்னர்கள் வருவார்கள் என்ற நிலை மாறி; ஆழிப் பேரலை அடித்தபோதும்; தானே புயல் வீசியபோதும்; வெயிலிலும், மழையிலும்; கோடையிலும், வாடையிலும் தமிழ்ச் சமுதாயத்தை கைம்மாறு கருதாமல் தாங்குகின்ற தாயே! நீங்கள்தான் எங்களுக்கு ஏணி!. நீங்கள்தான் எங்களுக்குத் தோணி. தங்களுக்குச் செய்நன்றி மறவாது செஞ்சோற்றுக் கடன் தீர்க்க; எங்கள் அனைவரின் ஒட்டுமொத்த ஆயுட்காலமும் உங்களுடையதாக ஆக்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி மணலினும் பல நூற்றாண்டுக் காலம் நீங்கள் நோய் இன்றி வாழ்ந்து வரலாறு படைத்திட, இந்தியத் திருநாட்டை நாளை முடிசூடி ஆண்டிட எல்லாம்வல்ல தில்லை நடராசன் திருவடிகளை வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில், காந்தியார் தெருவில், புதிய அங்கன்வாடி கட்டடத்தைக் கட்டி முடித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறந்த பொன்னாளில் திறக்கப்படும் என்று அறிவித்த, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், தொகுதி மக்களுடைய சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, கோட்டைமேட்டில், ஆர்.சி. தெருவில் உள்ள மாதா கோவில் அங்கன்வாடி மையத்திற்கு சமூக நலத் துறையின்மூலம் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவு திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அம்மா இல்லாமல் தமிழகம் இல்லை; நாளை அம்மா இல்லாமல் பாரதம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தமிழகத்தின் வேத மந்திரம், நாளைய பாரதத்தின் இராஜதந்திரம் அம்மா, அம்மா, அம்மா; இனி தமிழகத்தில் மற்றவர்களெல்லாம் சும்மா, சும்மா எனச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுத்து, பரிசீலனை செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடிகளில், சத்துணவு மையங்களில் பணி புரியக்கூடிய சத்துணவு அமைப்பாளர்கள், ஊழியர்கள் ஆகியோர் ஆசிரியர் பயிற்சி முடித்திருந்தால், அவர்களுக்குச் சிறப்புத் தேர்வு வைத்து, அவர்களுக்கு ஆசிரியர் பணி கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வந்தது. அதேபோன்று, அரசு ஊழியர்களுக்கான தனித் தேர்வும் வைக்கப்பட்டு, அதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டிருந்தன. அத்தகைய சலுகையும், வாய்ப்பும் தற்போது நடைமுறையில் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதிவாய்ந்த சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் உரிய கல்வித் தகுதி பெற்றிருப்பின், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக, இதுவரை மூன்று முறை சிறப்புத் தேர்வு நடத்தி, இதுவரை 800 பணியாளர்களுக்கு ஆசிரியர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவாறு, ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தகுதியானவர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குப் பதவி உயர்வு அளித்து ஆசிரியர் பணியிலே நியமிக்கப்படுவது நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

88—

தொழிற்பயிற்சி நிலையம்

***24006—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.